முக்கிய வார்த்தைகள்:
*கலாச்சாரம்*
*மதிப்பீடு*
*மார்க்கம்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**24 ஏப்ரல் 2026 / 06 துல்கஃதா ஹிஜிரி 1447**

# <u>இஸ்லாமும் கலாச்சாரமும்</u>

ٱلْحَمْدُ لِلّٰهِ ٱلَّذِي هَدَانَا لِهٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللّٰهُ. أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا ٱللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللّٰهُمَّ صَلِّ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللّٰهِ، ٱتَّقُوا ٱللّٰهَ. قَالَ تَعَالَى فِي التَّنْزِيْلِ: يَاأَيُّهَا الَّذِينَ آمَنُوا اتَّقُوا اللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீது உண்மையான உணர்வுடன் "தக்வா" [பக்தியை] ஏற்படுத்திக் கொள்வோமாக! அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடப்போமாக! அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்வோமாக! அல்லாஹ்வின் புனிதமான வழிகாட்டுதலின் பிரகாரம், நமது வாழ்க்கையை அமைத்துக் கொள்வோமாக! அல்லாஹ், நம்மனைவர் மீதும் தனது அருள்களையும் கிருபையையும் பொழிவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**வெள்ளிக்கிழமையில் ஒன்று கூடியுள்ள அருள்மிக்க ஜமாஅத்தார்களே!**
**கலாச்சாரம்** மற்றும் பண்பாட்டைப் பற்றி நாம் பேசும் போது நமது சிந்தனைக்கு வரக்கூடிய முக்கிய விஷயம் என்ன? ஒரு முஸ்லிமின்

வாழ்வில் **கலாச்சாரம்** ஆற்றக்கூடிய பங்கு என்ன? என்பதைப் பற்றி நாம் சிந்திப்பது அவசியமாகும். இன்ஷாஅல்லாஹ், இன்றைய ”குத்பா” பிரசங்கத்தில் **கலாச்சாரத்தைப்** பற்றி இஸ்லாமியப் பார்வையில் விவாதிக்கப்படும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

தலைமுறை, தலைமுறையாகச் செயல்படுத்தப்பட்டு வரும் நடைமுறைகள் மற்றும் விதிமுறைகளுக்கு **கலாச்சாரம்**, பண்பாடு எனக் கூறப்படுகிறது. அக்கலாச்சாரம் ஒரு குறிப்பிட்ட சமுதாயம் அல்லது மக்களின் பேச்சுக்களாகவோ, செயல்களாகவோ இருக்கலாம். சிலவேளைகளில், **கலாச்சாரச்** செயல்பாடுகளுக்கும் மதத்தின் பின்பற்றுதல்களுக்கும் மத்தியில் பொருத்தங்கள் இருக்கலாம்.

இன்று, உலகில் இரண்டு பில்லியன் முஸ்லிம்களுக்கும் அதிகமானோர் வாழ்ந்து வருகிறார்கள். முஸ்லிம்களாகிய நமது வாழ்க்கை இயற்கையாகவே பலதரப்பட்ட **கலாச்சாரங்களால்** வடிவமைக்கப் பட்டுள்ளது. இங்கு எழக்கூடிய கேள்வி என்னவெனில், இவ்விஷயத்தில் இஸ்லாமியப் பார்வை என்ன? என்பதாகும்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!

இஸ்லாம், பலதரப்பட்ட **கலாச்சாரங்கள்** இருப்பதை அங்கீகரிக்கிறது. திருக்குர்ஆனின் ”அல்-ஹுஜுராத்” எனும் அத்தியாயத்தின் 13-வது வசனத்தில். ”ஒருவர் மற்றவரைப் புரிந்து கொள்வதற்காகவே பலதரப்பட்ட சமுதாயங்களாகவும் கூட்டத்தார்களாகவும் மனிதகுலம் படைக்கப்பட் டுள்ளார்கள்” என அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா கூறுகிறான். எனவே, **கலாச்சாரம்** என்பது ஒரு சமுதாயத்தின் அடையாளமாக இருக்கின்றது; அக்கலாச்சாரத்தைக் கற்று, அறிந்து கொள்ளுமாறு நாம் ஆர்வமூட் டப்பட்டுள்ளோம்.

ஒரு **கலாச்சாரச்** செயல்பாடு, நமது சொந்த விதிமுறைகளுக்கு மாற்றமாக இருக்கின்றது எனக் கூறி, அதனை அவசரப்பட்டு மாற்றுவதோ அல்லது

புறக்கணிப்பதோ கூடாது. அதே சமயம், எந்த **கலாச்சாரச்** செயல்பாடுகள் இஸ்லாமியப் போதனைகளுக்கு முரண்பட்டவையாக இருக்கின்றனவோ அவற்றைப் பிடிவாதமாகப் பாதுகாக்க முயல்வதும் கூடாது. இவ்வாறு தான், **கலாச்சாரங்களைச்** சமநிலையாகப் பின்பற்ற வேண்டுமென இஸ்லாம் கூறுகிறது.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே**!
உண்மையில், **கலாச்சாரச்** செயல்பாடுகள் ஷரீஅத்தின் வழிகாட்டுதலுக்கு இணங்க இருக்கும் போது, அவற்றைப் பின்பற்ற அனுமதிக்கப்பட்டுள்ளது.

காரணம், இஸ்லாம், **கலாச்சாரம்** மற்றும் பண்பாடுகளை எதிர்க்கின்ற **மார்க்கம்** அல்ல; மாறாக, **கலாச்சாரங்கள்** ஓரிறை நம்பிக்கையின் **மதிப்பீடுகளுக்கு** இணக்கமாக அமையும் வகையில், அவற்றைச் செம்மைப்படுத்தி, அவற்றுக்கு வழிகாட்டுகின்றது. இஸ்லாத்துக்கும் **கலாச்சாரத்துக்கும்** மத்தியிலானத் தொடர்பை, பல அணுகுமுறைகளின் மூலம் புரிந்து கொள்ள முடியும் என அறிஞர்கள் விளக்கமளித்துள்ளார்கள். அவை பின்வருமாறு:

**முதலாவதாக, இஸ்லாத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, வலுவூட்டப்பட்ட பல கலாச்சாரங்கள் உள்ளன.**
விருந்தாளிகளை உபசரித்தல், ஒரு சமுதாயமாக ஒன்றுபட்டு உழைப்பது, தேவையுள்ளவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுதல் ஆகியவை நமது **கலாச்சாரத்தில்** ஆழமாக வேரூன்றிய செயல்களாகும். இஸ்லாம், இப்பழக்கங்களை அங்கீகரிப்பதோடு, இவற்றைச் செயல்படுத்துமாறும் ஆர்வமூட்டுகிறது. அவற்றுக்கு நன்மைகள் கிடைக்கும் எனவும் கூறுகிறது. உண்மையில், இது போன்ற நற்காரியங்கள், ஒருவரது ஓரிறை நம்பிக்கை பரிபூரணமானதாக இருக்கின்றது என்பதற்கான அடையாளங்களாக உள்ளன.

**இரண்டாவதாக, சில கலாச்சாரச் செயல்பாடுகளை எப்படிச் செயல்படுத்த வேண்டுமென இஸ்லாம் வழிகாட்டியுள்ளதுடன், அவற்றைச் சரி செய்துள்ளது.**

உதாரணமாக, இஸ்லாத்திற்கு முந்திய அறியாமைக் காலத்தில் காணப்பட்ட கலாச்சாரங்களில் ஒன்று, நமது குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் செய்த செயல் சரியானதாகவோ அல்லது தீங்கானதாகவோ எப்படி இருந்தாலும் அவருக்கே நாம் உதவி செய்ய வேண்டும் என இருந்தது; இது சரியில்லாத, குடும்ப வெறியை அடிப்படையாகக் கொண்ட கலாச்சாரமாகும். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் இந்தக் கண்மூடித்தனமான விசுவாசத்தை, கலாச்சாரத்தைச் சரி செய்தார்கள். நீதத்தை அடிப்படையாகக் கொண்டதொரு கட்டமைப்பை அறிமுகம் செய்தார்கள். அதாவது, அநீதம் செய்யும் ஒரு சகோதரரை, அவரது அநீதத்திலிருந்து அவரைத் தடுப்பதன் மூலம் அவருக்கு உதவ வேண்டுமென்றும், அவர் அநீதமிழைக்கப்படும் போது அவருக்கு உதவவேண்டுமென்றும் வழிகாட்டினார்கள். இக்கருத்தை, இறைத்தூதர் [ஸல்] அவர்கள் நவின்ற பின்வரும் ஹதீதின் மூலம் அறியலாம்: *"உங்களின் சகோதரர் அநீதம் செய்தாலும் அநீதமிழைக்கப்பட்டாலும் அவருக்கு உதவுங்கள்"* *[ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் புகாரி ரஹ்].* அநீதம் செய்தவருக்கு உதவுவதென்றால், அவரது அநீதமானச் செயல்களிலிருந்து அவரைத் தடுப்பதன் மூலம் அவருக்கு உதவுவதாகும்.

இதன் மூலம், பரம்பரைப் பரம்பரையாகப் பின்பற்றப்பட்டு வந்த **கலாச்சாரங்களுக்கு**, நீதம் மற்றும் உண்மைக்கு இணங்க, இஸ்லாம் மறு வடிவமைப்பைக் கொடுத்துள்ளதென்பது தெளிவாகத் தென்படுகிறது.

**மூன்றாவதாக, சில கலாச்சாரச் செயல்பாடுகள் மார்க்கத்தின் மதிப்பீடுகளுக்கு முரண்பட்டவையாக இருந்ததன் காரணமாக அவற்றை இஸ்லாம் நிராகரித்தது.**

இதற்கு உதாரணமாக, போதைப் பொருட்களை உடகொள்ளும் பழக்கத்தை எடுத்துக் கொள்ளலாம். இது போன்ற பழக்கங்கள் சமுதாயத்தின் ஒழுக்கப் பண்புகளை வேருடன் பிடுங்கி, அதற்கு தீங்கிழைப்பதால் இவற்றை நிராகரிப்பதில் இஸ்லாம் உறுதியாக உள்ளது.

**அன்பிற்குரிய ஜமாஅத்தார்களே**!

பரந்த நோக்கங்களைக் கொண்டுள்ள ஒரு பன்முக சமுதாயத்தில், **கலாச்சார** மாற்றங்களானவை, வித்தியாசமானக் கருத்துக்களுக்குக் காரணமாக அமையலாம். சிலர், **அக்கலாச்சாரங்கள்** மாற்றமானவையாக உள்ளன என்பதைக் காரணமாகக் காட்டி, உடனே அவற்றைப் புறக்கணித்து விடுகிறார்கள்; சிலர், **மார்க்கத்தின்** சரியான வழிகாட்டுதலின்றி, அனைத்து வகையானக் **கலாச்சாரங்களையும்** ஏற்றுக் கொள்கிறார்கள்.
எனவே, இவ்விஷயத்தில் இஸ்லாம் சமநிலையான அணுகுமுறையை நமக்கு வழங்குகிறது.

**முதலாவதாக, கலாச்சார வித்தியாசங்களை, சமுதாயத்தின் பலமாகப் பார்க்கப்பட வேண்டுமே தவிர, அவற்றைக் குறைகளாகக் கருதக் கூடாது.**

சமுதாயத்திலுள்ள கருத்துவேறுபாடுகள் பாராட்டப்பட வேண்டியவை யாகும்; அழிக்கப்படக் கூடியவையல்ல; வித்தியாசமான ஒவ்வொரு விஷயமும் தவறாக இருக்க வாய்ப்பில்லை. உதாரணமாக, இங்குள்ள பெரும்பாலான முஸ்லிம்கள், மலாய் பின்னணிகளுடன் காணப்பட்டாலும் பலதரப்பட்ட **கலாச்சாரங்களைக்** கொண்டுள்ள முஸ்லிம்கள் மீது மலாய் பழக்க, வழக்கங்கள் திணிக்கப்படக் கூடாது. **கலாச்சாரப்** பழக்க வழக்கங்களில் பரஸ்பர மரியாதை செய்து கொள்வது அவசியமாகும். அதுதான், சமுதாயத்தின் அமைதிக்கு அடிப்படையாகும்.

**இரண்டாவதாக, சிறந்த கலாச்சாரச் செயல்பாடுகள், ஓரிறை நம்பிக்கையாகிய ஈமானின் மதிப்பீடுகளால் வழிநடத்தப்பட வேண்டும்.**

அடக்கமான ஆடை அணிதல், நல்லொழுக்கங்களைக் கடைப்பிடித்தல், வலுவான குடும்ப மற்றும் சமூகத் தொடர்புகளைப் பேணுதல் ஆகியச் செயல்பாடுகள் பாதுகாக்கப்பட வேண்டும். அவை **மார்க்கப்** போதனைகளால் வழிநடத்தப்பட வேண்டும். அந்நிலையில், அவை வெறும் சம்பிரதாயங்களாக இருக்காது; அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் மீதான நமது நம்பிக்கையைப் பிரதிபலிக்கும் வணக்க வழிபாட்டுச் செயல்களாக ஆகி விடும்.

**மூன்றாவதாக, கலாச்சாரச் செயல்பாடுகளை மதிப்பீடு செய்வதில் கவனமாக இருப்பதுடன், பகுத்தறிந்து செயல்பட வேண்டும்.**
எல்லாக் **கலாச்சார** நடைமுறைகளையும் பாதுகாக்க வேண்மென்ற அவசியமில்லை. சிலநேரங்களில், இஸ்லாமியப் போதனைகளுக்கு இணக்கமாக இல்லாத நடைமுறைகளை விட்டு விடுவதற்கு நாம் துணிய வேண்டும். எனினும், அப்படிப்பட்ட மாற்றங்களை நுட்பமாகவும் படிப்படியாகவும் செய்ய வேண்டும்; இதற்கு உதாரணமாக, போதைப் பொருட்களைத் தடுக்கும் விஷயத்தில், இஸ்லாம் படிப்படியாக நடவடிக்கை எடுத்துள்ளதை எடுத்துக் கொள்ளலாம்.

நமது சமுதாயத்தில் சிலர், இஸ்லாத்தின் ஆழமானக் கல்வியறிவு இல்லாததன் காரணமாக, இஸ்லாமியப் போதனைகளுக்கு முரண்பட்ட நடைமுறைகளைப் பாதுகாக்க, இன்னும் முயற்சிகள் செய்து வருவதைக் காண்கிறோம். உதாரணமாக, மூட நம்பிக்கைகளைக் கொண்ட *kuda kepang,* மற்றும் பாதுகாப்புக்காக அணிந்து கொள்ளப்படும் தாயத்துக்கள், மந்திரங்கள் ஆகிய **கலாச்சார** நடைமுறைகளை எடுத்துக் கொள்ளலாம்; இவற்றையெல்லாம், நமது ஈமான் எனும் ஓரிறை நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்ட சிந்தனையில் காண்பது அவசியமாகும்; இவற்றை நுட்பமாக மாற்றிக் கொள்ள வேண்டுமென்ற திடமான நம்பிக்கை நம்மிடம் காணப்பட வேண்டும்.

**அன்பிற்குரிய சகோதர, சகோதரிகளே!**
இறுதியாக, **கலாச்சாரத்தையும் மார்க்கத்தையும்** நுட்பமாக அணுகுவது தற்காலத்தில் நமது சவாலாக இருப்பதை நாம் உணர வேண்டும். எனினும், இதற்காக நாம் முயற்சி செய்வது அவசியமாக இருக்கின்றது. பிரபலமான மலாய் பழமொழி ஒன்று உள்ளது; அதன் பொருள்: *"பழக்க, வழக்கங்கள் "ஷரீஅத்" தை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்; ஷரீஅத் இறை வேதமாகிய திருக்குர்ஆனை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும்"* என்பதாகும். **மார்க்கம்** நமது வழிகாட்டியாக உள்ளதென்றால்,

**கலாச்சாரமோ** சிறந்த **மதிப்பீடுகளை** நமது அன்றாட வாழ்க்கையில் நாம் வெளிப்படுத்துவதற்கான மூலமாக இருக்கின்றது.

ஓரிறை நம்பிக்கையால் வழிகாட்டப்பட்ட **கலாச்சாரத்தைச்** செயல்படுத்தும் சமுதாயமாக நாம் ஆகுவதற்கு முயற்சிப்போமாக; அமைதியான, கல்வியறிவுமிக்க, இஸ்லாமியப் போதனைகளை அறிவுப்பூர்வமாகச் செயல்படுத்துகின்ற சமுதாயமாக நாம் ஆகுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

## இரண்டாவது பிரசங்கம்

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَال فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِين وَفِي كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَم الرَّاحِمِين. اللَّهُمَّ بَدِّل خَوْفَهُم أَمْنا، وَحُزْنَهُم فَرَحا، وَهَمَّهُم فَرَجا، يَا

رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنا آتِنا فِي الدُّنْيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النَّارِ.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسانِ وَإِيتاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ ما تَصْنَعُونَ.